சிறப்பிதழ்
**Special Issue**

*Chief Editor*
Dr. M. Sadik Batcha

*Advisory Editor*
Dr. N. Chandra Segaran

*Editorial Board*
Dr. MAM. Rameez
Dr. Jeyaraman
Dr.A. Ekambaram
Dr. G. Stephen
Dr. S. Chitra
Dr. S.Senthamizh Pavai
Dr. A. Shunmughom Pillai
Dr. P. Jeyakrishnan
Dr. Seetha Lakshmi
Dr. S. Easwaran
Dr. Kumara Selva
Dr. Ganesan Ambedkar
Dr. Krishanan
Dr. Kumar
Dr. S. Kalpana
Dr. T. Vishnukumaran
Dr M. N. Rajesh
Dr. Govindaraj
Dr. Uma Devi
Dr. Senthil Prakash
Dr. Pon. Kathiresan
Dr. S. Vignesh Ananth
Dr.M. Arunachalam
Dr. S. Bharathi Prakash

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021
ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் :
தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எலையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
வீராச்சிபாளையம், சங்ககிரி

## தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
முனைவர் ம. கவிதா
முனைவர் செ. ஜெயந்தி

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-4
Part -4

Scanned by TapScanner

மற்றொன்று:

## செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்

ஏப்ரல் - ஜூன்

ஜூலை - செப்டம்பர்

அக்டோபர்- டிசம்பர்

Journal of

## Classical Thamizh

**(A Quarterly International Multi lataral Thamizh Journal)**

January - March

April - June

July - September

October - December

ISSN:2321-0737

Scanned by TapScanner

# சங்க இலக்கியங்களில் பெண்ணியம்

முனைவர் கி. பாலமுருகன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

பெண்ணியம் என்ற சொல் மிகவும் அண்மைக்காலத்தில் தான் தோன்றி வளர்ந்து வருகிறது. அது பெண்ணிகளின் உரிமைக்காகப் போராடும் ஒருபுதிய இயக்கமாகும். அதோடு பெண்களின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும் சமுதாயம் அரசியல், பொருளாதார சூழ்நிலையிலும் அவள் ஆண்களுக்கு சமமானவர் எனும் உயர்நெறியை நிலைநாட்டும் நோக்கத்தைக் கருவாகக் கொண்டு இயங்குகிறது என்று கூறப்படுகிறது. ஆனால் சங்ககாலத்தில் பெண்ணியம் சிறப்பாக இருந்தமை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

சமூகத்திலும் குடும்பத்திலும் வேலைசெய்யும் இடத்திலும் பெண்கள் தாழ்த்தப்படுவதும் சுரண்டப்படுவதுமாக உள்ளனர். தமிழர்களின் பண்பாட்டுக் களஞ்சியங்களாகத் திகழ்வன சங்க இலக்கியங்கள். இவைகள் நம்முன்னோர்களின் வாழ்க்கை வரலாறுகளைத் தெளிவான நீரோடைப்போல காட்டுகின்றன. அன்றை சமுதாயத்தில் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த மதிப்பையும் அவர்களால் சமுதாயம் மேன்மையுற்ற சிறப்பையும் இந்நூல்கள் சொல்லத் தவறியதில்லை.

## சமுதாயத்தில் மகளிரின் மேன்மைகள்

நாடு வளம் பெறவேண்டுமானால் சமுதாயம் சிறப்புற்றிருக்க வேண்டும். சமுதாயம் சிறப்புற்றிருக்க வேண்டுமானால் அங்குபெண்கள் போற்றப்பட வேண்டும் என்று சான்றோர்கள் கூறுவர்.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கிவையம் தழைக்குமாம்"

என்ற பாரதியின் வரிகளுக்கு ஏற்றார்போல் அக்காலச் சமூகம் பெண்களையும் போற்றியுள்ளார். துலைவி விருந்தினரைப் போற்றி உபசரிக்கும் சிறந்த பண்பையும் எளியோரைப் பாதுகாத்தல், உயர்ந்த குணமும் உடையவளாகிறாள். இச்செய்தியை,

"வாழிஆதன் வாழிஅவனி
விளைகவயலேவருக இரவலர்
எனவேட்டோளே,யாயே! யாமே!
பல்லிதழ் நீலமொடுநெய்தல் நிகர்க்கும்
தன்துறையூரன் கேண்மை
வழிவழிச் சிறக்க! எனவேட்டேமே!"

என்ற பாடல் அடிகள் மூலம் அறியமுடிகிறது.

## பொருளாதார முன்னேற்றத்தில் பெண்களின் செயல்பாடு

சங்க காலத்தில் பெண்களுக்கான சுதந்திரம் என்பது முழுமையாக இருந்துள்ளது. இல்லறத்தில் தேவைகளை நிறைவு செய்வது ஆணின் கடமை மட்டுமல்லாது பெண்களின் பங்களிப்பும் பெருமளவில் இருந்ததைக் காணமுடிகிறது.

"முந்நீர்வழக்கம் மகடூவொடு இல்லை" (தொல்,பொருள்-37)

பருவ மாற்றத்தினால் உண்டான பாலை நிலத்தில் உணவு கிடைப்பது என்பது அரிதான செயலாக இருந்துள்ளது. ஆண்கள் ஆற வைத்து உணவு தருவிப்பர். பெண்கள் உறுதியான பிடியை உடைய மண்வெட்டியால் நிலத்தைத் தோண்டி புல் அரிசியை எடுப்பர். இதனைக் கொண்டு குடும்பத்தில் உற்ற பசிப்பிணியைப் போக்குவர்.

"ஈண்பிணவு ஒழியப்போகி நோக்காழ்
இரும்பு தலையாத்த திருத்துகணை விழுக்கோல்



Scanned by TapScanner

உளிவாய்ச் சுரையின் மிளிரமிண்டுடி
இருநிலக் கம்பைப் படுநீறு ஆடி
நுண்புல் அடங்கியவெண்பல் எயிற்றியர்"
(பெரும்,90-95)

என்ற வரிகள் இதனை உணர்த்துகிறது.

**இல்லற மகளிர் மாண்பு**

சங்க நூல்கள் எல்லாம் இல்லற வாழ்க்கையை மிகச் சிறப்பாக கூறுகின்றன. அகப்பொருள் பற்றிக் கூறும் நூல்கள் அனைத்தும் இல்லறத்தைப் பாராட்டிக் கூறுவதாகவே உள்ளது. இல்வாழ்க்கையைத் திறமையுடன் நடத்தவேண்டிய முறைப்படி நடத்தினால் அதைக் காட்டிலும் இனிய வாழ்வு வேறு இல்லை என்பதை,

"கானம் நண்ணியசிறுகுடிப் பட்டென
இளைஞர் ஓம்பமரீஇ அவன் நயந்து
மனையுறை வாழ்க்கை வலியாங்கு மருகின்
இனியவும் உளவோ" (குறுந்-322)

என இல்லறவாழ்வின் மாண்பினைக் குறித்து எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகை எடுத்தியம்புகிறது. நன்மை மிகுதியாக நாட்டிலே பெருக வேண்டுமெனவும் தீமைகள் அகலவேண்டும் என வேண்டினாள் தலைவி. இதனை,

"பூத்தமாஅத்துப் புலால்அம் சிறுமீன்
தன்துறையூரன் தன்னொடு
கொண்டனன் செல்கஎனவேட்டேமே"

ஐங்குறுநூறு என்றபாடல் வரிகள் மூலம் அறியலாம். கணவனது வாழ்க்கைக்கு துணையாய் நின்று அன்பினால் ஒன்றி வாழும் மகளிர், வாழ்க்கையின் துணை எனப் பாராட்டப்பட்டனர். முனை வாழ்க்கையின் போற்றுகின்றார். தன்னால் தொழப்படும் தெய்வம் வேறுதன் கணவன் வேறு என்று கருதாமல் தன் கணவனையே வழிபடும் தெய்வமாக கருதி அன்பினால் அடங்கி ஒழுகுதல் பண்டையத் தமிழ் பெண்களின் பண்பாகும்.

"தெய்வந் தொழாஅள் தொழுதற்றெறதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"
(திருக்குறள்-55)

என்றார் தெய்வப்புலவர். பத்தினிப் பெண்கள் இருந்த நாடு கால மழை பொய்த்தறியாது, விளைவு குறைந்து, வளம் பிழைத்தலை அறியாது, வேந்தரது வெற்றி அறியாது என நல்லார் பலரும் பாராட்டியதற்கு ஏற்ப செங்குட்டுவன் என்னும் சேர மன்னன் பத்தினி தெய்வமாகிய கண்ணகிக்குக் கோயிலெடுத்து வழிபாடு நிகழ்த்திய செயலினையும் அதனை உணர்ந்த ஏனைய தமிழ் வேந்தர்களும் இலங்கைவேந்தராகியகயவாகுவும் தங்கள் நாட்டில் பத்தினி தெய்வமாகிய கண்ணகியை வழிபட்ட இயல்பினை சேர முனிவராகிய இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் சிறப்பாக பாராட்டியுள்ளார்.

**போர்களத்தில் பெண்கள்**

அரசன் போருக்குப் புறப்படும்போது பாசறைக்குப் பெண்களையும் அழைத்துச் செல்லும் வழக்கமிருந்தது. அவர்கள் இரவுநேரத்தில் அரசனுடைய படுக்கையறையைக் காவல்புரியும் வீரர்களுக்கு உதவி செய்தனர். விளக்கு அணையாமல் பார்த்துக் கொண்டனர். தற்காப்புக்காக வாளாயுதமும் வைத்திருப்பர்.

"குறுந்தொடிமுன்கைக் கூந்தர்அம்சிறுபுறத்து
இரவுபகல் செய்யும் திண்டாடிஒள்வாள்
விரவுவரிக் கச்சின் பூண்டமங்கையர்
நெய்உமிழ் சரையர்நெடும்திரிக் கொளீஇக்
கையமை விளக்கம் நந்துதொறும் மாட்ட"
(முல்லைப்பாட்டு,45-49)

என்ற பாடல் வரிகள் பெண்கள் பாசறைக்குச் சென்ற செய்தியைக் குறப்பிடுகின்றன.

**காதல் நினைவுகள்**

தலைவனது பிரிவுக்காலத்தில் தோழி தலைவியை ஆற்றுவாள், சில போது தலைவியும் தானே ஆறியிருப்பாள். பிரிந்த பேரன்பன் நெடுநாள் தங்கிவிட்டான். அவன் கண்முன் வரும் இன்பக் காட்சிகள் காதலியை நினைக்கும்படி தூண்டும் என்பது தலைவி தோழியின் நம்பிக்கை இந்நம்பிக்கை இயற்கையானது.



Scanned by TapScanner

"மறந்தனர் கொல்லோதாமே களிறுதன்
உயங்குநடை மடப்பிடிவருத்தம் நோனாது"

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றது.

நாணத்தைக் காக்க உயிர்விடுக. கற்பைக் காக்க நாணத்தை விடுக என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

"வெண்கோள் ஒழுக்கம் கண்கொளநோக்கி
நொதுமல் விருந்தினம் போலவிவள்
புதுநாண் ஒழுக்கமும் காண்குவம் யாமே"
(அகம்-12)

களவுச் சுவடுபடாமல் பலதீமைகள் தோன்றுவதற்கு முன்னரே தலைவன் மணந்து கொள்ள வேண்டும் என்பது தோழியின் ஆசை. இரவுக் குறியில் வந்ததலை மகனைக் கண்டதோழி, மலைநாடனே, இனிமணந்து கொண்டால் என்ன? மான் கூட்டமும் மிளகுக் கொடியும் படரும் மலைப் பகுதியில் நீ நிகழ்த்திய களவொடுக்கத்தை எம் சுற்றத்தார் அறியான்றே! அவள் அறியாத நிலையில் மணம் செய்து கொள்க.

இவ்வாறு நீ திருமணம் செய்துகொண்டால் முன்பின் தெரியாதவர்போல நாங்கள் நடந்து கொள்வோம் தலைவியும் முதல் முதலாக உன்னை காண்பதுபோல நாணம் கொள்வாள். அவள் பொய்யாக நாணுவதை கண்டு நாங்கள் மகிழ்வோம் என தோழி தன் உள்ள உணர்வை தலைவனிடம் வெளிப்படுத்துகிறாள்.

முதுபெண்களின் பக்குவப்பட்ட மனநிலை

எந்தவொரு நிகழ்வு நடைபெற்றாலும் இது நன்றாக முடியுமோ? தீயதாகமுடியுமோ? என்ற எண்ணம் மக்களிடத்தில் தோன்றும். அவ்வாறு உண்டாகின்ற பொழுதுதம் அனுபவத்தால் நன்மையை மட்டுமே எடுத்துக்கூறி உள்ளத்தைத் தெளிவடையச் செய்வது முதுபெண்டின் கடமையாக இருந்துள்ளது.

பொருள் தேடிச் சென்ற தலைவனை நினைத்து தலைவிவருந்தி இருக்கையில் நல்லசொல்லை எடுத்துக் கூறி வருத்தத்தை போக்குவர்.

"நல்லநல்லோர் வாய்ப்புள் தெவ்வர்
முனைகவர்ந்து கொண்டதிறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது நீதின்
பருவரவெவ்வெவ் கறைமாயோ யெனக்"
(முல்,18-21)

என்றதனால் தலைவன் பகைவரை வென்று அவர்பால் பெற்ற திரைப் பொருளுடன் இப்பொழுதே வந்து விடுவார் என்று முதுபெண்டிர் ஆறுதல் கூறி மனதைத் தேற்றுவதைக் காணமுடிகிறது.

வறுமையிலும் செம்மைப்பண்பு

தாம் வறுமை அடைந்திருந்தாலும் பிறருக்குக் காட்டிக் கொள்ளாத செம்மைப்பண்பு பெண்களிடம் இருந்துள்ளது. குப்பையில் முளைத்த கீரையையும் பிறர் அறியாமல் உண்டு வாழும் நற்குணம் மிக்கவளை,

"குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைந்து
இரும்பேர் ஒக்கலோடு ஒருங்குடன் மிசையும்"
(சிறுபாணாற்றுப்படை-137)

என்று சிறுபாணாற்றுப்படைபகர்கின்றது. உப்பில்லாமல் வேக வைத்த குப்பைக் கீரையை உண்ண வேண்டிய சூழல் வந்தாலும் பிறர் அறியாதவாறு வீட்டைத் தாழிட்டு உண்டனர். வறுமை நிலையிலும் மானமிழந்து வாழ்வதை வரும்போது தன்மானத்துடன் வாழ்வதையே விரும்பினர் என்பது புலனாகிறது.

முடிவுரை

தொன்றுதொட்டு தமிழ்ச் சமுதாயம் பெண்களுக்குப் பெருமதிப்பு அளித்து வந்துள்ளது. அக்காலத்தில் பெண்களின் நிலை மிகவும் போற்றுவதற்குரியதாய் விளங்கியது. இல்லத்திற்கான பணிகளை முழுமையாகச் செய்துள்ளனர். மேலும் வேலை, பொறுப்பு, கடமை என்று பெண்கள் இருந்துள்ளனர். பொருளாதாரம் வளர்ச்சி அடைவதில் பெரும் பங்காற்றியுள்ளனர் என்பதை சங்க இலக்கிய நூல்கள் வெளிப்படுத்துகின்றது.

௸



Scanned by TapScanner